மகாதானபுரத்திற்குப் பாசன வசதி

* 33. வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மகாதானபுரம் வடபாகம் பு. எண். 285/1, 286/95, முதலிய நஞ்சை நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் கோரிக்கை எழுப்பி வருகிறார்கள்?

(உ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(எ) காலதாமதத்திற்கு உரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) முதல் கோரிக்கை 17—8—1970 அன்று வரப்பெற்றுள்ளது.

(உ) மேற்படி நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க பிறிதொரு தனிப் பட்ட நபரின் நிலத்தின் வழியே கன்னி வாய்க்கால் வெட்டித்தான் தண்ணீர் கொண்டு செல்ல இயலும். மேற்படி நிலத்தை ஆர்ஜிதம் செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஆர்ஜிதம் செய்து பாசன வசதி அளிக்கப் படும்.

(எ) மேற்குறிப்பிட்ட கன்னி வாய்க்கால் வெட்டுவதற்காகும் செலவு முழுவதையும் மனுதாரர்தான் கொடுக்க வேண்டும். அதற்கான ஒப்புதல் கடிதம் 4—8—72 அன்று தான் பெறப்பட்டது. ஆகவே காலதாமதம் ஏற்பட்டது.

Adulteration in pesticides

* 34 Q.—Thiru K. NAGARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the measures taken by the Government to control adulteration of pesticides?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பூச்சிக்கொல்லி மருந்துகள் பற்றி உயிரியல், இரசாயன சோதனைகள் நடைபெற்று பிறகுதான் வேளாண்மைத் துறை அதற்கு ஒப்புதலளிக்கிறது. அதன்பிறகு அந்தச் சோதனை அறிக்கை பயிர் பாதுகாப்புக் குழுவின் முன் வைக்கப்படுகிறது. அக் குழுவின் ஏற்பளிப்புக்குப் பிறகுதான் ஒவ்வொரு ஆண்டும் ஒப்பந்தப்புள்ளி களைக் கோருவதன் மூலம் வாங்கப்படுகிறது. அத்துடன் இந்தியத் தர நிர்ணயக் குழுவின் அடையாளத்தைப் பெற்றுள்ள இரசாயனங்களும் வாங்கப்படுகின்றன.